எம்.சி.ஓ.பி எண்: 2980/2017 தேதி: 12.03.2025

மசா. : 1

பெயர் : கோகுல்நாத்

த/பெ. : ஸ்ரீனிவாசன்

வயது : 24

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து காண்பித்தார்கள் கைநாட்டு செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தொியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1முதல் 15 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இருசக்கரவாகனத்தை எனது நண்பர் விஜய் ஓட்டினார். அவர் என்னுடைய டியூசன் நண்பர். எங்கள் இருவருக்கும் விபத்து சமயத்தில் 18 வயது முடியவில்லை என்றால் சரி. விஜய்க்கும், எனக்கும் ஓட்டுநர் உரிமம் கிடையாது. அவருக்கு ஓட்டுநர் உாிமம் இல்லை என்ற விவரம் எனக்கு தொியும். விஜய்யும் இந்த விபத்திற்கு ஒரு காரணம் என்றால் ஆமாம். எதிரே வந்த லாாி மீதுதான் தவறு. நான் 12ம் வகுப்பு படிக்கும்போது விபத்து நடந்தது. தேர்வு எழுதி முடித்தபிறகு விபத்து நடந்தது. நான் பாஸ் செய்து 758 மார்க் வாங்கினேன். Maths with Computer Science படித்தேன். அதற்கு பிறகு என்னால் படிக்கமுடியவில்லை. கை தொழில் கற்றுக்கொள்ளவில்லை. மசாஆ 7,8 மருத்துவபில்களுக்கான தொகையை என் அப்பா கட்டினார். அந்த ரசீதுகளை பற்றி என் அம்மாவுக்குதான் தொியும். எனக்கு தொியாது. கேரளாவிற்கு சென்று சிகிச்சை பெற்றேன். அதற்கான பில்கள் என் அம்மாவுக்குதான் தொியும். என்னால் சுவற்றை பிடித்துக்கொண்டு நடந்து டாயிலட் செல்லமுடியும். என்னால் கையில் எடுத்து சாப்பிடமுடியாது. என் அம்மா எனக்கு ஊட்டுவார்கள். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ளவற்றை என்னால் படிக்கமுடியும். விரைவாக படிக்கமுடியாது. என்னால் எழுத முடியாது. விபத்திற்கு பிறகு என்னால் எழுத முடியாது. தொண்டையில் வைத்திருந்த டீயூப்பை எடுத்துவிட்டார்கள் என்றால் சரி. கடைசியாக எந்தமருத்துவமனைக்கு சென்றேன் என்று ஞாபகம் இல்லை. எந்த வருடம் என்று ஞாபகம் இல்லை. 2018 ல் கேளராவிற்கு பிறகு அண்ணா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். நான் சென்றுவந்த

மருத்துவமனைகள் எல்லாம் உள்நோயாளியாக சேர்க்கப்படவில்லை என்றாலும் பிசியோதெரபி மட்டும் செய்தேன் என்றால் சரியல்ல. ரமேஷ் மருத்துவர் எனக்கு தினமும் பிசியோதெரபி செய்தார். அவருக்கு எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்ற விவரம் என் அம்மாவிற்குதான் தொியும். மசாஆ 13 வங்கி கணக்கு எந்த வருடம் தொடங்கப்பட்டது என்ற விவரம் தொியாது. பாஸ் புக் யாரிடம் உள்ளது என்றால் தொியாது. தொண்டையிலும், கழுத்து அறுவை சிகிச்சை செய்தார்கள். தலையில் அறுவை சிகிச்சை செய்தார்களா என்றால் மருந்து போட்டார்கள். அறுவை சிகிச்சை செய்தார்களா என்று எனக்கு தொியாது. விபத்து சமயத்தில் தலைக்கவசம் போடவில்லை. விபத்திற்கு விஜய்தான் முழு காரணம் என்றால் ஆமாம். விஜயையும் இருசக்கர வாகன உாிமையாளரையும் காப்பீட்டாளரையும் வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சி தானாக முன்வந்து விபத்திற்கு லாாி டிரைவர்தான் காரணம் என்றார். அதனால் 2ம் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.